

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள குழந்தை நல மையத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், ஒன்றிய செயலாளர் பிவி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவ சக்திவேல், பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலு, பேரூராட்சி துணை தலைவர் ஜோதி, மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூருக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## திருப்பத்தூர் மேற்கு – தெற்கு ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பத்தூர், ஜுன். 23-

திருப்பத்தூர் மேற்கு (ம) தெற்கு ஒன்றிய செயல்வீரர் கூட்டம் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளரும், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான A. நல்லதம்பி MLA அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.இராஜேந்திரன் அவர்கள் வரபேற்பளித்தார். ஒன்றிய கழக நிர்வாகிகள் சி.சின்னதம்பி, சி.கழகரசு, சி.கே.சின்னதம்பி, அ.விஜயா, எல்.சிவலிங்கம், எஸ்.சரவணன், வெ.செல்வம் ஆகியோல் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாளர் திரு.கதேவராஜி, தொகுதி பொறுப்பாளர். வேலூர்ஜி.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் சு.அரசு, டி.ரகுநாத், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், நகர கழக செயலாளர்.சு. இராசேந்திரன், அ.சம்பத்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்பித்தனர். மற்றும் ஒன்றியக்குழு தலைவர் விஜியாஅருணாசலம், டி.ஆர்.ஞானசேகரன், சத்தியவாணிவில்வலம், வி. அன்பழகன், பி.ஆர். சின்னபையன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ்.பி.அண்ணாதுரை, அ.ஆதித்யா, இ. வெங்கடேஷ், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக துணை அணிகளின் அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட தலைநகரில்முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையினை அமைத்து திறந்து வைக்க ஏற்பாடு செய்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி பாராட்டுகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகைத்தரும் கழகத்தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும் திருப்பத்தூர் மேற்கு (ம) தெற்கு ஒன்றியங்களிலிருந்து பத்தாயிரத்திற்கும் குறையாமல் கழக தோழர்கள் வருகை தருவது என தீர்மானிக்கப்பட்டது. ஓரணியில் தமிழ்நாடு என்ற கழகத் தலைவர் ஆணைப்படி, கழகத்தினையும் இளையத்தலைவரின் கருத்தினையும் வலுப்படுத்தும் நோக்கில் தீர்மானிக்கப்பட்டது. அனைத்து ஊராட்சிகளிலும் விழுக்காடு புதிய உறுப்பினர்கள் ய சேர்க்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### பொதுமக்களின் 30 வருட கோரிக்கையான

# உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி!

## தமிழ்நாடு முதல்வர் காணொலி மூலம் துவக்கி வைத்தார்!

உளுந்தூர்பேட்டை, ஜூன்.23–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.06.2025 அன்று வெள்ளிக்கிழமை அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை சார்பில் 202526ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஆகிய இடங்களில் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களின் 30 வருட கோரிக்கையான கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள், இதனை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறப்பு பிரிவு கலந்தாய்வில் தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கி நிறைந்து மனது நிகழ்ச்சி யில் மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினார்கள்.

மேலும் பொது மக்களின் 30 வருட கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் திராவிட மாடல் நல்லாட்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று முன்தினம் புதிதாக தொடங்கி வைக்கப்பட்டுள்ள உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கை, முதலாம் கட்ட கலந்தாய்வு (முதல் சுற்று) 20.06.2025 இன்று சிறப்பு பிரிவு கலந்தாய்வும், 23.06.2025 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடப்பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 50 மதிப்பெண் மற்றும் அதற்கு மேலும் பெற்ற மாணவர்களுக்கும், 24.06.2025 அன்று பி.காம் மற்றும் பிபிஏ பாடப் பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில் கூடுதல் மதிப்பெண் 220 மற்றும் அதற்கு மேலும் பெற்ற மாணவர்களுக்கும், 25.06.2025 அன்று பி.எஸ்சி கணினி அறிவியல் பாடப்பிரிவிற்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில் கூடுதல் மதிப்பெண் 220 மற்றும் அதற்கு மேலும் பெற்ற மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாணவர் சேர்க்கைக்கான முதலாம் கட்ட கலந்தாய்வு (இரண்டாம் சுற்று) 26.06.2025 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடப்பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 50 மதிப்பெண்களுக்கு கீழ் பெற்ற மாணவர்களுக்கும், 27.06.2025 அன்று பி.காம், பிபிஏ மற்றும் பி.எஸ்சி கணினி அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில் கூடுதல் மதிப்பெண் 220க்கும் கீழ் பெற்ற மாணவர்களுக்கும் கலந்தாய்வு நடைபெறவுள்ளது. எனவே இதனை உயர்கல்வி கற்கும் மாணவ மாணவியர்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறப்பு பிரிவு கலந்தாய்வில் பி.எஸ்சி படிப்பில் சேர்வதற்கான சேர்க்கை ஆணைப் பெற்ற மாணவர் விக்னேஷ் தெரிவிக்கையில் எனது ஊருக்கு அருகிலேயே உளுந்தூர்பேட்டையில் அரசு கலைக் கல்லூரி தொடங்கி உயர் கல்வி பயிலும் வாய்ப்பை ஏற்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார், மேலும் உளுந்தூர்பேட்டையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திறந்து இருப்பது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், தமிழக முதல்வருக்கு இந்த நேரத்தில் எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் துணை ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், உளுந்தூர்பேட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கு.செல்வராஜ், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கா. கார்த்திகா, உளுந்தூர்பேட்டை நகர் மன்றத் தலைவர் கே.திருநாவுக்கரசு, நகர்மன்ற துணைத் தலைவர் ப.வைத்தியநாதன், உளுந்தூர்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் பி.ராஜவேல், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் அலெக்சாண்டர், நகர கழக செயலாளர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக சார்பில், ஓரணியில் தமிழ்நாடு! கழக புதிய உறுப்பினர் சேர்க்கை ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், செ.தினகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடி அருகில், கலைஞர் திடலில் நடைபெற்ற, 31 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார் இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு நான்காண்டு நிறைவடைந்ததையொட்டி, செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக, "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற நான்காண்டு சாதனை மலர் கையேட்டினை வழங்கினார். உணவு மற்றும் உணவுப் பொருள் உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் , ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செங்குட்டுவன், முருகன்,உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# ஓரணியில் தமிழ்நாடு கழக புதிய உறுப்பினர் சேர்க்கை!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



செஞ்சி ஜுன் 23-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் 2.50 லட்சம் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் "மண், மொழி, மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு" கழக புதிய உறுப்பினர் சேர்கை அவசர ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் "மண், மொழி, மானம் காக்க ஓரணியில்தமிழ்நாடு "கழக புதிய உறுப்பினர் சேர்க்கைஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் உள்ள இபிஎஸ் திருமண மண்டத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமை தாங்கினார். தொகுதி பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மைலம் இள, புகழேந்தி, மாவட்ட துணைசெயலாளர்கள் ரவிக்குமார்,அருணகிரி, அமுதா ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ரமணன், செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனி சின்னராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் செயல்படுத்தி வருகின்றார்.

அந்த வகையில் முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தப்பட்டுள்ள அனைத்து திட்டங்களையும் கிராமத்தில் உள்ள மக்களிடம் ஒன்று சேர்க்கும் வகையில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள் பணியாற்ற வேண்டும்.மேலும் திமுகவின் திட்டங்களையும், சாதனைகளையும் நாடே போற்றுகிறது திமுகவின் வளர்ச்சியை கண்டு நூறு சதவீதம் பொறாமையுடன் காழ்ப்புணர்ச்சியுடன் மற்றவர்கள்சித்தரித்து செயல்படுகின்றனர்.தமிழர்கள் பெருமையுடன் உயர்ந்து நிற்கின்றதை பொறுத்துக் கொள்ள சிலரால் முடியவில்லை இதை முறியடிக்க வேண்டும் தலைமை கழகம்சொல்லுகின்ற பயிற்சியை பெற்று எதிரணியில் உள்ளவர்களின் முயற்சியை முறியடிக்க வேண்டும்.எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக ஆட்சியை அமைக்க அனைவரும் உறுதிமொழி எடுத்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் "மண் மொழி மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு" கழக புதிய உறுப்பினர் சேர்க்கையில்விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் 2.50 லட்சம் புதிய உறுப்பினர் சேர்க்கையை நிர்வாகிகள் தீவிர படுத்த வேண்டும் என செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில்செஞ்சி, மயிலம், திண்டிவனம் ,ஆகிய மூன்று தொகுதிகளில் புதியதாக கழக உறுப்பினர்கள் சேர்ப்பது எனவும்,மாண்புமிகு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் இடுகின்ற அனைத்து கழக பணிகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பாக செயல்படுத்திடவும்,விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கழக அரசின் சாதனைகள் குறித்து தெருமுனை பிரச்சார கூட்டங்களை விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய நகர பேரூர் ஊராட்சி கழகங்களில் சிறப்பாக நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,செந்தமிழ் செல்வன், ,தலைமை தீர்மானம் உறுப்பினர் செஞ்சி சிவா,பொதுக்குழு உறுப்பினர்கள்கதிரேசன், செல்வராஜ், மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, சொக்கலிங்கம், ராஜாராமன், விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன்,மணிமாறன், செழியன்,பழனி, ரவிச்சந்திரன்,பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் திண்டிவனம் நகர செயலாளர் கபிலன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத்,பிரசன்னா, ராஜசக்தி,அன்சாரி, ப. செந்தில் குமார், டாக்டர் அசோக், கோ.தமிழரசன், திருமலை , சிவகாமி, எஸ். ராஜா, ரோமியன், காதர் நவாஸ் ,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் அனைவருக்கும் நன்றி கூறினர்.



தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி தேனி வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசு சாதனை விளக்க பொதுக்கூட்டம் தாடிசேரி கலைஞர் திடலில் தேனி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் முருக ஜெகதீசன். தலைமையில் நடைபெற்றது. தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி முன்னிலை வைத்தார் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி சிறப்புரை ஆற்றினார். வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான். ஒன்றிய துணை அமைப்பாளர்கள் அருள் வாசகன். காளிராஜ். ராஜா. சரவணன், பாண்டியராஜ். ஆகியோர் கலந்து கொண்டனர்



திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மேற்கு மற்றும் தெற்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். வேலூர் ரமேஷ், எஸ்.ராஜேந்திரன், எம். ராஜேந்தின், சு.அரசு, டி.ரகுநாத், ஜோதிராஜன், அ.சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.